கருவூலக் கணக்கு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

தமிழ்நாடு, சென்னை-35.

*****

முன்னிலை: திரு.தி.ந.வெங்கடேஷ், இ.ஆ.ப.

ந.க.எண் 1533/சி2/2021 நாள்: 25.08.2021

| | |
|---|---|
| பொருள்: | பணியமைப்பு- கருவூலக் கணக்குத் துறை - திரு.நா.நாகேந்திரகுமார், இளநிலை உதவியாளர், இராமநாதபுரம் மாவட்ட கருவூல அலகு - கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடல் |
| பார்வை: | 1. இராமநாதபுரம் மாவட்டக் கருவூல அலுவலர், அவர்களின் செயல்முறை ஆணை எண் 9149/2017/அ2, நாள் 18.11.2019 |
| | 2. இராமநாதபுரம் மாவட்டக் கருவூல அலுவலர், அவர்களின் கடித ந.க. எண் 4733/2020/அ2-1, நாள் 07.12.2020 |
| | 3. இவ்வாணையரக கடித ந.க. எண் 1533/2021/சி2, நாள்: 31.03.2021 |
| | 4. அரசு கடித எண்.18361/நிதி (க.க.2)/2021, நாள்.26.05.2021. |

*******

ஆணை:

இராமநாதபுரம் மாவட்டக் கருவூலத்தில் கூடுதல் கருவூல அலுவலராகப் பணியாற்றிய திரு.ச.நாகநாதன் அவர்கள் 04.07.2017 அன்று பணியிடை மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர் மற்றும் மகனுமாகிய திரு.நா.நாகேந்திரகுமார் அவர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு பார்வை-1ல் காணும் செயல்முறை

ஆணைப்படி 19.11.2019 முற்பகல் முதல் இராமநாதபுரம் மாவட்ட கருவூல அலகில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

தனியருக்கு பணிவரன்முறை செய்வது தொடர்பாக, பார்வை-2-இல் காணும் கருவூல அலுவலர், இராமநாதபுரம் அவர்களின் கருத்துரு இவ்வாணையரகத்தில் பெறப்பட்டது. தனியரின் பணியினை வரன்முறை செய்தல் தொடர்பாக, பார்வை-4ல் காணும் அரசுக் கடிதத்தில் தெரிவித்தவாறு அரசாணை (நிலை)எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ-1)துறை, நாள் 26.02.2021-ல் பத்தி 5-ல் உள்ள (5.1),(5.2)-ல் சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higer than the appointing authority), அவரவர் கட்டுப்பட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings)வெளியிடலாம் எனத்தெரிவிக்கப்பட்டது.

பார்வை-1-இல் காணும் செயல்முறை ஆணையில், திரு.நா.நாகேந்திரகுமார் (காலஞ்சென்ற திரு.ச.நாகநாதன் கூடுதல் கருவூல அலுவலர், இராமநாதபுரம் மாவட்டக்கருவூல அலகு அவர்களின் மகன்) கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டார். மேலும் அச்செயல்முறையின்படி தனியர் இராமநாதபுரம் மாவட்டக்கருவூல அலகிற்கு இளநிலை உதவியாளராக 19.11.2019 முற்பகல் முதல் தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்டார்.

பார்வை-2-இல் காணும் இராமநாதபுரம் மாவட்டக் கருவூல அலுவலர் அவர்களின் கருத்துருவை பரிசீலித்து, பார்வை-4-இல் காணும் அரசுக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இளநிலை உதவியாளர் பணியிடத்தில் ஓராண்டிற்கு மேலாகப் பணிபுரிந்து வரும் திரு.நா.நாகேந்திரகுமார், இளநிலை

உதவியாளரின் தற்காலிகப் பணிநியமனம் இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும்படியாக உள்ளதாலும், கருணை அடிப்படையிலான பணிநியமனம் மற்றும் அப்பதவிக்குரிய அனைத்து தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும் திரு.நா.நாகேந்திரகுமார் அவர்களின் பணியினை தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-இல் பிரிவு -28-இன் உட்பிரிவு (1)-ன்படி தனியர் பணியேற்ற நாளான 19.11.2019 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

மேலும், தனியர்பொருட்டு தமிழ்நாடு கருவூலக்கணக்குத்துறை பணிவிதிகளின்படி அன்னாருக்கு தகுதிகாண்பருவம் துவங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதுமிருப்பின் அதனை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது. தகுதிகாண்பருவம் துவங்கப்பட்டு மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தினராக கருதப்படுவார் என ஆணையிடப்படுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஊதிய உயர்வு / ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றினைப் பெறத் தகுதியுடையவராகிறார். மேலும் பணிவரன்முறை ஆனது பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படவேண்டும்.

தி.ந.வெங்கடேஷ்
கருவூலக் கணக்கு ஆணையர்.

பெறுநர்:

திரு.நா.நாகேந்திரகுமார்,
இளநிலை உதவியாளர்,
மாவட்டக்கருவூலம்,
இராமநாதபுரம்.

N. Dafmd
4/09/2021.